பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
22 11 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் சமூக பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண உதவிடும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- இந்தோ – பசிபிக் மண்டலத்தில் அமைதி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் அமைச்சர்களுடன் லாவோஸில் பேச்சு நடத்தினார்.
- நிறுவனங்களின் வர்த்தகம் தொடர்பான தகவல்களின் ரகசிய தன்மையை பாதுகாப்பதற்கான சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரும் மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- ஐ நா கட்டமைப்பின் கீழ் பருவநிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- ஆசிய கோப்பை கூடைப்பந்து முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் சமூக பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண உதவிடும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் இன்று சர்வதேச கலாச்சார திருவிழாவை தொடங்கி வைத்து பேசிய அவர்,

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அனைவரும் நாட்டிற்கு முன்னுரிமை என்ற அணுகுமுறையை பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

நாட்டின் பாரம்பரியம், மொழிகள் மற்றும் கலாச்சார மாண்புகளையும், பாரம்பரிய அறிவாற்றலையும் பாதுகாக்க வேண்டிது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற மக்களின் உணர்வுகளையும் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தெலங்கானா ஆளுநர் திரு ஜிஷ்ணு தேவ் வர்மா, மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

இந்தோ – பசிபிக் மண்டலத்தில் சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு தாராள வர்த்தகம் நடைபெற இந்தியாவும், ஜப்பானும் ஆக்கப்பூர்வமாக செயல்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக லாவோஸ் சென்றுள்ள திரு ராஜ்நாத்சிங், ஜப்பான் அமைச்சர் ஜெனரல் **Nikatani –**யை சந்தித்து பேசிய பின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இதைத் தெரிவித்துள்ளார்.

இந்திய - ஜப்பான் இடையேயான நட்புறவு வலுவாக இருப்பதாகவும் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

லாவோஸில் பிலிப்பைன்ஸ் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு கில்வர்ட்டோவையும் திரு ராஜ்நாத்சிங் சந்தித்து பேசினார்.

இந்தியாவின் கிழக்கத்திய வெளியுறவுக் கொள்கையில் பிலிப்பைன்ஸ் முக்கிய நட்பு நாடாக விளங்குகிறது என்று திரு ராஜ்நாத்சிங் அவரிடம் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நிறுவனங்களின் வர்த்தகம் தொடர்பான தகவல்களின் ரகசிய தன்மையை பாதுகாப்பதற்கான சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரும் என்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பிரிட்டன் இந்தியா வர்த்தக சபையின் எதிர்கால தொழில்நுட்பம் குறித்த மாநாட்டில் உரையாற்றிய அவர், தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான மையமாக இந்தியா

வலுப்பெற்று வரும் நிலையில் தொழில் நிறுவனங்களின் தகவல் கட்டமைப்புகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது என்று குறிப்பிட்டார்.

ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களின் தகவல்கள் அதன் நம்பகத்தன்மைமிக்க நிறுவனங்களுடன் மட்டுமே பகிர்ந்து கொள்வதற்கான கட்டமைப்பை பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது என்று அவர் கூறினார்.

எதிர்காலத்திற்கான எரிசக்தி ஆதாரங்களை பாதுகாப்பது குறித்த தகவல்களை ரகசிய காக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

2030-ஆம் ஆண்டுக்குள் ஆயிரம் ஜிகாவாட் மின் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நீடித்த வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பையும், கணினி கட்டமைப்பையும், இந்தியா உருவாக்கி உள்ளதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மணிப்பூர் வன்முறை தொடர்பாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே குடியரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பாதுகாப்பு தொடர்பான தவறான தகவல்களை அளித்திருப்பதாக பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பு தொடர்பாகவும், நிர்வாகம் தொடர்பாகவும் தவறான நடைமுறைகளை அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முந்தைய காங்கிரஸ் அரசுகள் தவறான நடைமுறைகளை பின்பற்றியதால்தான் மணிப்பூரில் பிரச்சினை எழுந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியின் சீரிய நடவடிக்கைகளால் வடகிழக்கு மாநிலங்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சிபெற்று பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மருத்துவம், கல்வி போன்ற வசதிகளும் வடகிழக்கு மாநிலங்களில் மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தின்படி ஐ நா கட்டமைப்பின் கீழ் பருவநிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அஸர்பைஸானின் **Baku** நகரில் நடைபெற்று வரும் பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாட்டில் இந்தியா தாக்கல் செய்துள்ள அறிக்கையில், பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கு போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

பருவநிலை சவால்களை சமாளிப்பதில் நாடுகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுவது ஏமாற்றம் அளிப்பதாகவும் இந்தியா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பருவநிலை சவால்களால் உலகின் தெற்கத்திய நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நாடுகளை பாதுகாக்க ஐ நா கட்டமைப்பின் மூலமே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஒட்டுமொத்த பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரங்களை திரட்டுவது, பருவநிலை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான திட்டத்தை உருவாக்குவது உலகளாவிய செயல்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையை தாக்கல் செய்து பேசிய மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான அமைச்சகத்தின் செயலர் திருமதி லீனா நந்தன், பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று இந்தியா விரும்புவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் 18 லட்சத்து 81 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தைச் காட்டிலும் இந்த ஆண்டு ஒன்பது புள்ளி மூன்று சதவீதம் பேர் கூடுதலாக இத்திட்டத்தில் இணைந்திருப்பதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாலும், தொழிலாளர் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக இந்த ஆண்டில் அதிகம் பேர் தொழிலாளர் வைப்பு நிதி திட்டத்தில் சேர்ந்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை தொழிலாளர்களிடையே ஏற்படுத்துவதற்கான முயற்சிகளையும் தொழிலாளர் நல அமைச்சகம் மேற்கொண்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதத்தில் 18-லிருந்து 25 வயதுக்கு உட்பட்ட பிரிவினர் 59 சதவீதம் பேர் திட்டத்தில் இணைந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இரண்டு லட்சத்து 47 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் சேர்ந்திருப்பது நல்ல முன்னேற்றம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானியம் மற்றும் சிறுதானிய மதிப்புக்கூட்டு பொருட்கள் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் உள்ளிட்ட வேளாண் சார்ந்த பொருட்களை மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சியாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரேசா மகளிர் வளாகத்தில் இயற்கை சந்தை நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை சார்ந்த பொருட்கள் இந்த சந்தையில் விற்கப்படவுள்ளது.

பொதுமக்கள் இயற்கை சந்தையை பார்வையிட்டு, இயற்கை பொருட்களை வாங்கி பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

தலைநகர் தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும் காற்றின் தரத்தில் பெரிய மாற்றம் ஏதும் காணப்படவில்லை.

காலை ஏழு மணி நிலவரப்படி சராசரி காற்று மாசு-வின் அளவு 371-ஆக பதிவாகியுள்ளது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் விடுத்துள்ள அறிவிப்பில், தலைநகரின் பல பகுதிகளில் 400 புள்ளிகளுக்கும் கூடுதலாக காற்றின் தரம் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜகாங்கிர்புரியில் காற்று மாசு-வின் அளவு 426-ஆகவும், ஆனந்த் விஹாரில் 410-ஆகவும், சோனியாவிஹாரில் 400-ஆகவும் பதிவாகியுள்ளது.

இதனிடையே இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் மூன்று நாட்களுக்கு காலை நேரத்தில் தில்லி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் பனிமூட்டம் அதிகமாக காணப்படும் என்று தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

இலங்கையில் அதிபர் திரு **Anura Kumara Dissanayake** தமது அரசின் 29 துணை அமைச்சர்களை நியமனம் செய்துள்ளார்.

ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசின் சார்பில் கடந்த திங்கட்கிழமை 21 காபினெட் அமைச்சர்கள் பதவியேற்று புதிய அரசு அமைக்கப்பட்டது.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின்படி 30 காபினெட் அமைச்சர்களையும், 40 துணை அமைச்சர்களையும் நியமனம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஆசிய கோப்பை கூடைப்பந்து முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் இப்போட்டி மாலை ஆறு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 150 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பெர்த்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் தமிழக அணி - உத்தரப்பிரதேச அணியையும், ஜெய்ப்பூர் அணி -தில்லியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**